LIBRARY
30 NOV
Eastern University, Sri Lanka.

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

# ECO 301 Monetary Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01.(அ) பொருளாதாரம் ஒன்றில் பணம் ஆற்ற வேண்டிய அடிப்படைத் தொழிற்பாடுகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) பணத்திற்கான கேள்வி பற்றிய கெயின்சிய கோட்பாட்டை சுருக்கமாக விளக்குக?
(10 புள்ளிகள்)

02.(அ) பணவீக்கத்தின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக?
(10 புள்ளிகள்)

(ஆ) 1977 களிற்கு பின்னரான இலங்கையின் பணவீக்கத்தின் போக்கினை மதிப்பிடுக.
(10 புள்ளிகள்)

03.(அ) வணிக வங்கி ஒன்றின் பிரதானமான பணிகளை அடையாளப்படுத்தி விளக்குக?
(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் நிதி முறையியலில் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் ஆற்றும் பணிகளை மதிப்பிடுக?
(10 புள்ளிகள்)

04.(அ) மத்திய வங்கி ஒன்றின் தொழிற்பாடுகளை அடையாளப்படுத்துக?
(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு நாட்டின் பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டில் நாணயக் கொள்கையின் முக்கியத்துவத்தை விளக்குக?
(10 புள்ளிகள்)

05.(அ) பிரீட்மனின் (Friedman) நவீன பணக்கணியக் கோட்பாட்டினை விளக்குக?
(10 புள்ளிகள்)

(ஆ) "கெயின்ஸ், திரவப் பொறிநிலையைக் காரணம் காட்டி பணக் கொள்கை உயர் வெளியீட்டை அடைவதில் செயற்திறனற்றது என வாதிடுகிறார்." விளக்குக.
(10 புள்ளிகள்)

06. “சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பனவற்றின் நோக்கங்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை நிதி நெருக்கடிகளிலிருந்து பாதுகாப்பதாகும்.” இக்கூற்றுக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துரைக்க?

(20 புள்ளிகள்)

07. அதிகரித்துவரும் பொதுப்படுகடனானது (Public debt) எதிர்காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தப் போகும் தாக்கம் பற்றி விமர்சன ரீதியாக ஆராய்க?

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு வரைக.

(அ) இலத்திரனியல் பணம் (Electronic Money)
(ஆ) சீராக்கம் செய்யப்பட்ட பண நிரம்பல் ($M_2b$)
(இ) பணச் சந்தையும் மூலதனச் சந்தையும்
(ஈ) பிலிப்ஸ் வளையியும் பணவீக்கமும் (Phillips Curve and Inflation)

(4x5=20 புள்ளிகள்)

********